வாக்குமூலம்

குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லடம்

வழக்கு எண் : CC 135 of 2018

வழக்கு சாட்சி - PW -10

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. குர்சித்பேகம் | தொழில் | : | |
| தந்தை பெயர் | : | சம்சுதீன் | வயது | : | |
| கிராமம் | : | | | | |
| தாலுக்கா | : | | | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 12.08.2025.

(எதிரி ஆஜர்.

**முதல் விசாரணை :** **நாள் : 12.08.2025.**

1) நான் தற்போது கீரனூர் பழனி தாலுக்காவில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரி அகமதுல்ல என்னுடைய பேரன் ஆவார். சுமார் 7 - 8 வருடங்களுக்கு முன்பு என் பேத்தி விஷேசத்திற்காக துணி எடுப்பதற்காக திருப்பூர் சென்னை சில்க்ஸ்க்கு வந்து துணி எடுத்துவிட்டு காரில் வந்து துணி எடுத்துவிட்டு வீட்டிற்கு சென்றுக்கொண்டிருந்தோம். காரை என் பேரன் அகமதுல்லா ஓட்டினார் காரில் எனது கணவர் சம்சுதீன் நானும் என் மகள் பௌசியா பானு , எனது பேத்தி ஆகியோருடன் சென்றுக் கொண்டிருந்த போது திருப்பூர் - தாராபுரம் நோக்கி சென்று கொண்டிருந்த போது ஒரு ஸ்கூட்டி வந்து ரோட்டின் குறுக்கே வந்து எங்கள் வண்டியின் மீது மோதியது. அதில் எங்கள் காரில் வந்தவர்களுக்கு எல்லாருக்கும் சிறிய காயம் ஏற்பட்டது.

2. ஸ்கூட்டியில் வந்தவர்களுக்கு என்ன ஆனது என்ற விபரம் தெரியாது. மருத்துவமனைக்கு சிசிச்சைக்கு சென்றோம். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>அரசுதரப்பில் சாட்சி அரசுதரப்பிற்கு விரோதமாக சாட்சியம் அளித்துள்ளதால் அவரை பிறழ்சாட்சியாக கு.வி. செய்ய அனுமதி கேட்டு அனுமதி வழங்கப்பட்டது.</u>**

**<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை</u> :**

1) கேள்வி : போலீசார் விசாரணையில் கடந்த 25.08.2016 ம் தேதி எங்களுக்கு சொந்தமான TN 30 AA 9100 என்ற சவர்லட் காரில் நானும் என் கணவர் மகள் பேத்திகளுடன் வீட்டில் இருந்து புறப்பட்டு காரில் என் பேரன் அகமதுல்லா ஓட்டிக்கொண்டு திருப்பூர் சென்னை சில்க்ஸ் சென்று துணிகளை எடுத்துக்கொண்டு மாலை 4.45 மணிக்கு திருப்பூர் - தாராபுரம் வேலம்பட்டி வல்லக்காட்டுத்தோட்டம் அருகே வடக்கில் இருந்து தெற்கு நோக்கி அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், ஓட்டிச்சென்று முன்னால் வடக்கில் இருந்து தெற்காக சென்றுக்கொண்டிருந்த TVS Victer மோட்டார் பைக்கின் மீது மோதி விபத்தினை ஏப்டுத்தினார்கள் என்றும் அந்த மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு பேருக்கு பலத்த காயங்கள் ஏற்பட்டு ஒரு போக்கு வண்டி மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததார்கள் என்றும் மேற்படி விபத்தில் எனக்கும் தலை மற்றும் உடலில் காயம் ஏற்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால்

**பதில்** : சரியல்ல.

**கேள்வி** . எதிரியானவர் பேரன் என்பதால் அவர் இவ்வழக்கில் இருந்து காப்பாற்றும் பொருட்டும் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால்

**பதில்** : சரியல்ல.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரி குறைவான வேகத்தில் வாகனத்தினை ஓட்டினார் என்றால் சரிதான். வாகனத்தில் முதியவர்கள் இருந்ததால் குறைவான வேகத்தில் தான் சென்றார்.

சாட்சி விசாரணை என்னால் தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தப்பட்டு சரிபார்க்கப்பட்டது. சாட்சியிடம் கொடுத்து அவர் படித்து பார்த்து சரியென கையெழுத்து செய்தார்.

S SAPNA Digitally signed by S SAPNA Date: 2025.08.12 19:41:09 +0500

நீதித்துறை நடுவர்,

பல்லடம்.